**தலைப்பு 105 – வெகுசன ஊடக அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 105 – வெகுசன ஊடக அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெகுசன ஊடக அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டில் இயந்திர உபகரணங்களில் கொள்வனவு செய்தல் SA-82 படிவத்தின் பிரகாரம் ரூபா 7,790,850 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிசெயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல்கள் ரூபா 5,956,540 ஆக காணப்பிக்கப்பட்டமையால் ரூபா 1,834,310 வேறுபாடு காணப்பட்டது. | நிதிச்சொத்துக்கள் கைப்பற்றல்களின் சரியான பெறுமதி ரூபா 5,956,540 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. SA-82 படிவத்திற்காக தகவல்களை உள்ளடக்குவதற்கு சிகாஸ் இணையதளத்தை ஈடுபடுத்துவதற்கு தரவேற்றம் செய்யும் போது ஏற்பட்ட தவறின் காரணமாக ஆண்டில் இயந்திர | சரியான பெறுமதியைக் காணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உபகரணங்களை கொள்வனவு செய்தல் பெறுமதி ரூபா 7,790,850 ஆக காண்பிக்கப்படுகின்றது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மரணமடைந்த ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 36,576 மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 198,502 ஆக கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த ஊழியரின் கடன் தொகையை அறவிடுவதற்காக உரிய பிணையாளருக்கும், தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் ரூபா 198,502 கடன்தொகை உரிய பிணையாளியிடம் இருந்து அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கடன் மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 23.10 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைகளை நீடிப்பதற்காக விண்ணப்பிப்பதற்கு விடுமுறை அங்கீகரிக்கின்ற அதிகார தரப்பினரின் இணக்கப்பாட்டில் நாட்டிற்கு வெளியே செல்வதற்கு முன்னர் உரிய உத்தியோகத்தரால் பெறப்பட்ட வெளி நாட்டிலிருந்து வெளியே விடுமுறை நீடிக்க முடியாதிருந்த போதிலும் 85 நாட்கள் சம்பளத்துடன் மற்றும் 08 நாட்கள் சம்பளமற்ற வெளிநாட்டு | உத்தியோகத்தர் பொதுவாக வெளிநாட்டு விடுமுறையாக விடுமுறை விண்ணப்பத்தல் மற்றும் அதன் கோரிக்கைகள் உரிய பிரிவுத் தலைவரினால் பரிந்துரை செய்வதற்கும், கடமைகளுக்கு இடையூறு இல்லாத வகையில் இந்த உத்தியோகத்தரின் வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் போது இடர்கடன் பரீட்சிப்பதில் தவறவிடப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில் உரிய தகவல்களை | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விடுமுறை பெற்றுச் சென்ற உத்தியோகத்தருக்கு 02 வருடங்களுக்காக சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையை நீடித்தல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு விடுமுறை அங்கீகரிக்கும் போது ரூபா 232,105 ஆன கடன் மீதியை அறவிடல் தொடர்பாக கவனத்தில் கொள்ளாதிருந்ததுடன் 16.5 ஆம் பிரிவின் பிரகாரம் 10 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கையொப்பமிட்ட உடன்படிக்கை பூரணப்படுத்தப்படாத உடன்படிக்கை ஆகும். அவ்வாறே 23.18 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தர் நாட்டிற்கு வெளியே செல்கின்ற விடுமுறை தொடர்பான அறிக்கையொன்று மாதந்தோறும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அனுப்புவதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. | |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணைப் பதிவேடு | பிணைப்பதிவேடு தயாரிக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கர்கள் தொடர்பான பிணைப்பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 447(5) இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு | பொறுப்பதிவேடுகள் ஆரம்பித்து பேணிச் செல்வதற்காக உரிய பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக்கப்பட வேண்டிய முறையின் பிரகாரம் இயலுமான வகையில் பொறுப்புப் பதிவேடு பேணிச்செல்லப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்ட வரிகளின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 300,000,000 ஆக இருந்த போதிலும் கிடைத்து தேறிய வருமானம் ரூபா 150,450,000 ஆனமையால் 50 சதவீதத்திற்கு அண்ணவான அளவில் வருமான குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தது. | தொலைக்காட்சி அலைவரிசைகளில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக வரி செலுத்தி ஒளிபரப்பப்படுகின்ற தொலைக்காட்சி நாடகம் மற்றும் திரைப்படங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி நாடகம், திரப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்ட வரிகளின் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 215,020,000 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது அது ரூபா 150,450,000 ஆனமையால் 2022 ஆம் ஆண்டினை விட 30 சதவீத அளவினால் வருமானம் குறைவடைந்திருந்தது. | தொலைக்காட்சி அலைவரிசைகளில் காணப்பட்ட நிதிநெருக்கடியின் காரணமாக வரி செலுத்தி ஒளிபரப்பப்படுகின்ற தொலைக்காட்சி நாடகம் மற்றும் திரைப்படங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்ட வரியின் நிலுவைத் தொகையான ரூபா 25,220,500 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடல் தொடர்பாக உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மீண்டெழும் செலன விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 4,490,000 ஏனைய மீண்டெழும் செலவின விடயங்கள் 04 இற்கு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டமையால் நிதிப்பிரமாணங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்து பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவினங்களை கட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன செலவின நிதியேற்பாடு பயன்படுத்தல் வரையறுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 02 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 2,322,800 ஆன தேறிய நிதியேற்பாடுகளில் 100 சதவீதமும் மேலும் 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 405,410,000 தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 373,083,146 பயன்படுத்தப்படாது | செலவினங்களை கட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மீண்டெழும் | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டதுடன் அது 60 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது. | மற்றும் மூலதன செலவின நிதியேற்பாடு பயன்படுத்தல் வரையறுக்கப்பட்டிருந்தது. | |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக மேலும் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்களை மேற்கொண்டு திறைசேரிக்கு அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் புதிய CIGAS இணையத்தை ஈடுபடுத்துவதன் மூலம் உருவாக்கப்பட்ட ஒன்றிணைந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அறிக்கை (SA 92) இன் கீழ் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உரிய அறிக்கைகளை நாளது வரையாக சமர்ப்பிப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான மேலும் மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்களை மேற்கொண்டு திறைசேரிக்கு அறிக்கையிட்டு உரிய ஆண்டுகளின் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயயரித்து பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரதியொன்று | நிதிக்கட்டுப்பாடுகளுக்கான ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வு எதிர்வரும் நிதியாண்டின் போது மேற்கொண்டு கணக்காய்வாளர் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 187 | 3,595,875 | நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக பகிரங்க கட்டுப்பாட்டுச் சபையினால் சேகரிக்கப்பட்ட ரூபா 3,595,875 தொகை 02 நாட்கள் முதல் 17 நாட்கள் வரை தாமதித்து வங்கியிலிடப்பட்டிருந்தது. | இயலுமான வரை அத்தினமே பணத்தை வங்கியில் இடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட பணம் தாமதம் இன்றி வங்கியில் இடப்படல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 880 | - | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளைச் சட்டத்திற்கு இணங்க 15 உத்தியோகத்தர்கள் அளவில் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 20 ஆந் திகதிய இலக்கம் 01/2015 என்ற அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | - | காணப்படுகின்ற பொருளாதார நிலைமைகளில் மாற்றங்களை கவனத்தில் கொண்டு ஊழியர்களுக்காக சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் அந்த சேவைகளை வழங்குவதற்கான செலவினங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு கால ரீதியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வரி திருத்தம் 2025 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கிணங்க கால ரீதியில் கட்டணங்கள் திருத்தப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் | | | | |
| (i) | I பகுதியின் 9 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) ஆம் பந்தி | 824,922 | செயல் நிமித்த உபகட்டுநிதி பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உபகட்டுநிதி தீர்த்து வைக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுமொத்தமாக ரூபா 824,922 ஆன 19 முற்பணங்கள் 22 நாட்கள் முதல் 112 நாட்கள் வரையிலான வீச்சு வரையும் தீர்த்து வைத்தல் தாமதமடைந்திருந்தது. | பணிகள் நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் முற்பணத்தை தீர்த்து வைப்பதற்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | I பகுதியில் 11.1 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | - | மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை எதிர்வரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுவதுடன் பூர்த்தியடைந்தவுடன் அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 09 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் 02 (vii) ஆம் பந்தி | 260,000 | போக்குவரத்துப் படி பெறுகின்ற உத்தியோகத்தருக்கு மாதாந்த சம்பளத்துடன் அல்லது சம்பளமற்ற 30 நாட்களுக்கு மேற்பட்ட கால எல்லைக்கு விடுமுறை பெறப்படுமாயின் அந்த உத்தியோகத்தருக்கு அந்த காலப்பகுதிக்காக போக்குவரத்து அல்லது எரிபொருள் படி செலுத்த முடியாதிருந்த போதும் சம்பளத்துடன் வெளிநாட்டு விடுமுறை 35 பெற்றிருந்த உத்தியோகத்தருக்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. | அந்தத் தொகை 2024 சனவரி மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை 12 தவணைகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 04 தவணைகள் தற்போது அறவிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1994 யூன் 04 ஆந் திகதிய இலக்கம் 95 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 1,326,000 | திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் அனுமதி பத்திரத்தை விநியோகிப்பதற்காக திரைப்படம், DVD மற்றும் குறும்கதைகள் ஆய்விற்காக பொதுமக்கள் தொடர்பு கட்டுப்பாட்டுச் சபையின் குழு அங்கத்தவருக்காக ரூபா 1,326,000 படியாக செலுத்தப்பட்டிருந்தது. | 2023 மார்ச் 31 ஆந் திகதி முதல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் செலுத்துவதற்காக உரிய பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தருக்கு பதிற்கடமை அடிப்படையில் வேறொரு நிறுவனத்திற்கு நியமனம் பெற்றுக்கொள்வதற்கு தாபன விதிக் கோவையில் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தின் பணிப்பாளர் அமைச்சு செயலாளரின் இணங்கப்பாட்டின் அடிப்படையில் அரசாங்கத்தின் நியதிச்சட்ட முயற்சி மீள்கட்டமைப்பு அலகில் பணிப்பாளர் (ஊடகம்) ஆக பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த காலத்திற்காக அமைச்சினால் படியாக ரூபா 917,310 செலுத்தப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்ட நிலைமையில் உத்தியோகத்தர்களை பதிற்கடமையில் நியமித்தல் பொதுவாக இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் உரிய பணிப்பாளருக்காக தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தில் கடமைகளுக்கு இடையூறு இன்றிய வகையில் பதிற்கடமை செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையின் படி 2023 ஆம் ஆண்டின் செயற்பாடுகளில் பௌதீக மற்றும் நிதி செயல்முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை. அரச கொள்கை மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட செயல்முன்னேற்றம் சரியாக மக்களுக்கு தொடர்புபடுத்தும் நோக்கில் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த | அமுல்படுத்தப்பட்ட திட்டங்களில் உள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அரச நிதி ஒதுக்கப்படாமையின் அடிப்படையில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தைக் காண்பிப்பதற்கு தவறியிருந்த போதிலும் தேசிய அபிவிருத்தி ஊடக நிலைய உத்தியோகத்தர்கள் யாவரும் கிடைக்கப்பெற்ற ஆகக் குறைந்த வசதிகளின் கீழ் அரச கொள்கை | நிலையத்தை ஸ்தாபிக்கும் நிறைவேற்றக்கூடிய வகையில் பணிப் பொறுப்புக்கள் திட்டமிட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றத்தை சரியாகவும் செயற்திறனாகவும் புதிய ஊடகங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக மக்களுக்கிடையே கொண்டு செல்லும் ஊடக செயற்பாட்டை அமுல்படுத்துகின்றனர். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரசாங்க அமைச்சுக்களும் அங்கீகரித்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டுக்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அமைச்சில் அவ்வாறு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு செயல் நடவடிக்கைத் திட்டம் 2023 சனவரி 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கையின் நிலப்பரப்பில் தொலைக்காட்சி ஒளிபரப்பு டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு உதவி வழங்குதல் மட்டுப்படுத்தியதன் காரணமாக அந்த செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மீண்டும் தீர்மானித்துக்கொள்வதற்கு மேலதிகமாக காலம் ஒன்று தேவையாக இருந்தமையால் செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பித்தல் தாமதமடைந்திருந்தது. ஏதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் குறித்துரைத்த கால எல்லையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் நடவடிக்கைகளுக்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 26 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய செயற்திட்ட முன்மொழிவுகள் பெறப்படாமை, நிதியேற்பாடு வழங்கப்படாமை, பொருளாதார நெருக்கடி, அனுசரணையாளர்களை தொடர்புபடுத்துவதற்கு முடியாதிருந்தமை போன்றவற்றின் காரணத்தால் அமுல்படுத்த முடியாதததாக காண்பிக்கப்பட்டுள்ளது. | பிரயோக ரீதியில் கவனத்தில் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படாத போதிலும் செயல்முன்னேற்ற செயற்பாடுகளில் 26 செயற்பாடுகள் காணப்பட்டதுடன் நிறுவனம் மற்றும் நிர்வாகப் பிரிவில் 06 செயற்பாடுகளின் நிதி செயலாற்றல் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை காணப்பட்ட போதும் பௌதீக செயலாற்றல் காணப்படவில்லை. | ஊடக கொள்கைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்தல் தாமதமடைந்தமை, அரசாங்கத்தின் நிதியேற்பாடு கிடைக்காதிருந்தமை போன்ற காரணத்தினாலும் பௌதீக செயலாற்றல் காணப்படாமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | சகல செயற்பாடுகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டியிருந்ததுடன் பௌதீக செயலாற்றல் குறித்துரைத்த பிரகாரம் அடையப்படல் வேண்டும். |
| (ஆ) அமைச்சின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பகிரங்க கட்டுப்பாட்டு சபையின் | செயலாளரிடம் இருந்து கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு முதல் அந்த நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் அமைச்சின் செயல்நடவடிக்கைத் | அமைச்சின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டத்துடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கையின் நிலப்பரப்பில் தொலைக்காட்சி ஒளிபரப்பு பிரிவை செயற்திட்டம் 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அமுல்படுத்தப்படாமையினால் மீண்டும் 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் படி நாளதுவரையாக்கப்பட்டதுடன் தொழில்நுட்பத்துடன் அமுல்படுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் மூலம் நாடுமுழுவதும் பரவிக் காணப்படுகின்ற 16 ஒளிபரப்புக் கூடங்களை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் 2024 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த ஒளிபரப்புக் கூடங்களை ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. | JICA நிறுவனத்தால் நிதி விடுவித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையால் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் அதன் பின்னர் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கும் இதுவரை முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை | அமைச்சின் பெறுகைத் திட்டம் 2022 திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிப்பதற்கு முடியாதிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் 2023 சனவரி 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அந்த சந்தர்பத்தில் | எதிர்வரும் ஆண்டிற்குரிய பெறுகைத் திட்டம் குறித்துரைத்த காலப்பகுதியில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்துவதற்காக வருடாந்த பெறுகைத் திட்டம் மீளாய்வாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்று அதன் பிரதி ஒன்று தேசிய பெறுகைகள் ஆணைக்குழு , கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத்திட்டம் அத்திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் கணக்காய்விற்கு 2023 மே 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அனுப்பத் தவறியதன் காரணமான 2023 மே 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளினை பட்டியலிட்டு தயாரிக்க வேண்டியிருந்த பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளின் போது அமைச்சின் சகல பிரிவுகளின் தகவல்களையும் கோரி 03 வருடங்களுக்கான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பிரதான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்தில் காணப்படுகின்ற பகிரங்க கட்டுப்பாட்டு சபையின் சினிமா திரையரங்கை நவீன மயப்படுத்துதல் பெறுகைத் திட்டத்தின் செயலாற்றலில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>எதிர்காலத்தில் பெறுகைத்திட்டத்தின் செயலாற்றலைத் தயாரிக்கும் போது சகல பெறுகைப் பணிகளையும் உள்ளடக்குவதற்கு முயற்சி எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சுக்குரிய விடயம் ஒன்று அல்லாத வாகனம் ஒன்றை பழுதுபார்த்தல் தொடர்பாக இயந்திரப் பொறியியலாளரால் வழங்கப்பட்டிருந்த அவதானிப்பின் பிரகாரம் வாகனத்தின் எரிபொருளுக்கு நீர் கசிவு மற்றும் எரிபொருள் தாங்கியில் எரிபொருள் முடிவடையும் வரை ஓடுதல் பழுதுபார்த்தலுக்காக காரணம் கூறப்பட்டமையால் பொறுப்புவாய்ந்த நபரை இனங்காண்பதற்கு கவனம் செலுத்தாமல் பழுதுபார்ப்பதற்கு ரூபா 1,687,250 செலவிடப்பட்டிருந்தது. | மின்சக்தி அமைச்சரவை குறிப்பின் போது ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்படும் வரையில் இந்த வாகனம் இந்த அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. மீண்டும் அமைச்சரவை திருத்தக் குறிப்பின் போது இந்த வாகனம் பின்னர் வருகை தந்த அமைச்சருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தை மாற்றுகின்ற சந்தர்ப்பத்தில் பழுதுபார்த்தல் ஏற்பட்டிருந்தமையால் பாதிப்பு பொறுப்பு வாய்ந்தவரை தீர்மானிப்பதற்கு முடியாதிருந்தது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட பொதுமக்கள் தொடர்பு கட்டுப்பாட்டுச் சபை ஸ்தாபிக்கப்படுகின்ற கட்டிடத்தில் காணப்படுகின்ற சினிமா திரையரங்கு 2024 சனவரி 23 ஆந் திகதி வரையும் செயற்படு நிலைக்கு கொண்டுவரப்படாமையினால் ஒரு திரைப்படத்தையேனும் காட்சிப்படுத்துவதற்காக சிறிய சினிமா திரையரங்கிற்கு ரூபா 25,000 கட்டணம் உரிய நபர்களினால் செலுத்த | தற்போது வரையில் (2024.01.23) திரை பொருத்தப்பட்டுள்ளதுடன் வேலை நடவடிக்கைகள் 95 சதவீதம் முதல் பூர்த்தி செய்யப்பட்டள்ளது. காட்சி இயந்திரத்தின் செயற்பாடற்ற பகுதி மீண்டும் சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்காக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதியேற்பாடு 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படாமல் இருந்தமையால் இதற்காக | வருமானத்தை சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்ததுடன் 2003 சனவரி 01 ஆந் திகதி முதல் 2003 ஆகஸ்ட் 31 வரை 146 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்படங்கள் மாத்திரம் அவதானிக்கப்பட்டிருந்தமைய ால் ரூபா 3,650,000 வருமானம் நிறுவனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாடு வழங்குமாறு திறைசேரியிலிருந்து கோரப்பட்டுள்ளது. அந்த நிதியேற்பாடு கிடைத்தவுடன் அந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியுமாக உள்ளதுடன் அதன் பின்னர் திரைப்படங்களை முழுமையாக காட்சிப்படுத்துவதற்கு முடியும். | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட டீசீபீ இயந்திரம் தற்போது செயற்படு நிலையில் காணப்படாதிருந்தமையால் அதன் இருப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக பரீட்சித்து உரிய பிரகாரம் செயற்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட வில்லை. | டீ.சீ.பீ. இயந்திரத்தின் இருப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான நிலைமை அறிக்கை பெறப்பட்டள்ளதுடன் அதன் பிரகாரம் உரிய பகுதி பொருத்தப்பட்டு உரிய பிரகாரம் செயற்படுத்தப்படுவதாக உரிய நிறுவனத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது . அது தொடர்பாக உத்தரவாத சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இயந்திரங்களின் தரநிலைமையை உரிய முறையில் பேணிச் செல்லல் வேண்டும். |
| (இ) | 2023 யூலை 31 இல் உள்ளவாறு பொது மக்கள் தொடர்பு கட்டுப்பாட்டு சபையின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களில் மொத்தம் ரூபா 5,351,544 ஆக இருந்ததுடன் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 3.572,875 ஆகும். அதன் பிரகாரம் வருமானத்துடன் ஒப்பிடும் போது செலவினம் ரூபா 1,778,669 இனால் அதிகரித்தமையால் நிறுவனத்தின் செயல் முன்னேற்றம் வீழ்ச்சியடைந்திருந்தது. | அந்த ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் அடிப்படையில் திரைப்படங்களை கொண்டு வருதல், நாடகம், காட்சிகளை தயாரித்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் வருமானம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதனால் நிறுவனத்தின் நிதிசார் செயல் முன்னேற்றத்தின் குறைவு ஒன்று காண்பிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பிரஜைகள் / சேவைநலனாளிகள் விஞ்ஞாபனம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டத்தின் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்திக்குரிய செயலாற்றல் மதிப்பீட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் பயிற்சிகளின் பெறுபேறுகளை மதிப்பிடுவதற்கான பொறிமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இல 02/2018 சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை நலனாளிகள் விஞ்ஞாபனத்தின் கீழ் செயலாற்றல் மதிப்பீட்டு உடன்படிக்கை 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்காக முகாமைத்துவ சபையொன்று அங்கீகரித்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் பதிற்கடமை அடிப்படையில் 2023 மே மாதம் முதல் நியமிக்கப்பட்டமையால் முகாமைத்துவக் குழுவில் இருந்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அங்கீகரித்துக் கொள்வதில் தாமதமடைந்திருந்தது. 2024 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம் தற்போது கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |